Registered

# சன்மார்க்க போதினி.

SANMARKAPOTHINI.

பத்திரவிலைவிகிதம்
வருஷத்துக்கு ரூபா க சதம் உரு
தபாற்செலவு.
இலங்கைக்குசதம் ௫௰
இந்தியாவுக்குசதம் ௫௰
பிறதேசங்களுக்கு ௭௫

ஒன்றுவிட்டொருசனிக்கிழமைகளிற்பிரசுரஞ்செய்யப்படும்.

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

விளம்பரவிலைவிகிதம்
வரி ஒன்றுக்குச் சதம் ௧௰
௧௰ க்குமேல்வரி க-க்கு ௮
௨௰ க்குமேல்..........௬
இணைப்பிரசுரமொவ்வொன்றிற்கும் ரூ-ல் ஒன்று

XXVI. | Jaffna 26th November 1910 | No 24

௨௬-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் ௧௯௧௰ ம் ஹூ கார்த்திகை மீ ௨௬ உ சனிக்கிழமை. | சங்கியை ௨௪

## கைத்தொழில்.

நம்மூரில் முற்காலம் பிறதேசப்பொருள் வருவதரிது. மிகுதிப்பற்றுத் தமக்குவேண்டியவைகளைத் தாமே செய்துகொள்ளுவார்கள். தற்காலத்திலோ எல்லாம் நூதனப்பொருளாயிருக்கவேண்டுமென்று நம்மூர்ப் பொருட்களைத் தள்ளிவிட்டு மேலைத்தேசப் பொருட்களைவாங்கத் தலைப்பட்டுவிட்டார்கள். அதனால் சுதேச கைத்தொழிலாளர் அதைக் கைவிடவும், அதை விருத்திசெய்யாமல்விடவும் நேரிட்டது. முற்காலத்தில் உடுக்கும் சீலைகளும் சுதேச நெசவுகாரராலேயே நெய்யப்பட்டன. அதற்கான நூல்களும் இங்கேயே நூற்கப்பட்டன. ஆனால் அவை [illegible]ர்களும் ஒழுங்கற்றவையும், அதனால் நெய்யுஞ்செய்யப்படுந் துணிகள் முரட்டுத்துணிகளுமாயிருக்கும். ஐரோப்பிய சீலைகள்வரவே அதன் திருத்தத்தையும்மலிவையுங்கண்டுசுதேசிகள் அத்தொழிலை அடியுடன் விட்டுவிட்டார்கள். இல்லையென்று மல்லுரோப்பியநூல்களைவாங்கி இங்கேநெசவுசெய்கிறார்கள். ஆனால் அதுவுஞ்செலவுக்குக் கட்டாதென்று கைவிடுவாருமுண்டு. முற்கால நெசவுகாரர் தங்கேலையை நிறுத்தாமல் தத்தொழிலில் முன்னேற விருப்பங்கொண்டு செவிலும் நூல் நூற்பதிலும் திருத்தமடைந்திருப்பாரானால் இவ்விழுக்கை வந்திராது.

விளக்கு, சட்டி, ஆயுதம் முதலியவைகளும் நம்மூரிலே உற்பத்தியாயின. ஏழைவீடுகளுக்கு அகாச்சதத்து மண்விளக்குப்போதுமதாயிருக்கும். அதனாலன்றோ "மண்ணுக்குமேல் மரம், மரத்துக்குமேற் குயம், குயத்துக்குமேற் குளர், குளத்துக்குமேற் கொடி, கொடிக்குமேல் பூ, பூவுக்குமேல் புகை" என்று முற்காலத்தார் கொடியுஞ்சொல்வார்கள். எரிக்கும் எண்ணெயும் பிறவிடங்களிலிருந்து வருவதில்லை. மிகுதிப்பற்றினோர் வேப்பெண்ணெய் எரிப்பார்கள். தற்காலம் வேப்பங்கொட்டையைச் சிலவிடங்களில் பொறுக்குவாருமரிது. விளக்கோ எவ்வீட்டிலும் நூதனவிளக்கேயிருக்கும். முற்காலத்தில் லோகங்களில் கைவிளக்கு, குத்துவிளக்கு, தூக்குவிளக்கு, தூண்டாவிளக்கு, சரவிளக்கு முதலியவைகளும் சுதேசகைத்தொழிலாளராற் செய்யப்பட்டுப் பாவித்தார்கள். தற்காலத்திலோ மிகுதிபற்றி மேலைத்தேச விளக்குகள் எவ்வீடுகளிலும் எவ்வாலயங்களிலுஞ் சோபிக்கிறது. சுதேசபொருள்களைக்காண்பது மரிது. கண்ணாடிவேலையன்றி மற்றையவிதமான லோகவகை வேலைகள் நம்மூர்ச் சுதேச கைத்தொழிலாளராலும் செய்யக்கூடுமாயினும் அவரைத் தூண்டிச் செய்விப்பாருந் திருத்துவாருமில்லை. மலிவும் வடிவும்நோக்கி சுதேசவிருத்தியை நோக்காமல் விட்டுவிடுகிறார்கள்.

தற்போது இந்தியவாசிகள்பலர் பெருமுயற்சிசெய்து முன்னேற்றத்துக்கு அடிக்குச்செய்கிறார்கள். நாமோ இருந்தபடி இருக்கிறோம். இச்சிறியதேசத்தில் எவ்விதமுயற்சியுங் கைகூடாதென்பாருண்டு, அது தப்பிதம். தக்க யந்திரங்கள் வாங்கக்கூடிய பிரபுக்களிருக்கிறார்கள், நல்ல கைத்தொழிலாள ரிருக்கிறார்கள், பின்னை ஏன் அம்முயற்சி சித்திபெறாது. முற்காலம் எவ்வுயர்குடும்பத்தாரிடத்தும் இராட்டினம் இருந்தது. அவ்வீட்டுப்பெண்கள் பொழுதுபோக்குக்காகப் பஞ்சோட்டி நூல்நூற்று வந்தார்களென்றறிகிறோம். தற்காலப்பெண்களிடம் மிகுதியாய்ச் சோம்பலே குடிகொண்டிருக்கிறது. எத்தொழில் செய்யினும் வெட்கமென்றெண்ணுகிறார்கள். வீட்டுக்குள்ளிருந்து செய்யக்கூடிய வேலையையும் கைவிடலாமா? பட்டினப்புறத்தில் அ[illegible] பெண்கள் தென்னந்தும்புவாங்கித் திரித்துக் கயிறுக்கி விற்றுச் [illegible]கும் ஏன் செய்யக்கூடாது? கடல்கிட்டவுண்டு. தென்னம்பொச்சும் வாங்கலாம். அதைக் கவனிப்பாரில்லை. கடற்கரைகளிலே தாழைகள் மிகுதியாயுண்டு. அவ்வோலையைவெட்டிப் பாய் இழைக்கலாம். குடைகட்டலாம். விழுதைத் தும்பாக்கிக் கயிறுதிரிக்கலாம். இப்படியிருக்க ஒருவரும் அதிற் சிந்தைவைப்பதில்லை. பெரிய முதலுள்ளவர்கள் அல்லது பரோபகாரிகள் ஒரு கொம்பனிகூடி நம்மூரில கைத்தொழில் முயற்சிக்கான யந்திரங்களை ஸ்தாபிக்கலாம். அவற்றுள் ஒன்று காகிதஞ்செய்தல். காகிதஞ்செய்வதற்குக் கடற்கரையில் ஏராளமாய்க்கிடக்கும் நாகதாளியும் உதவுமாம். தென்னம்பொச்சும் உதவுமாம். குப்பையிலே போடப்படும் வாழைச்சருகு குறி முதலியவைகளும் உதவும். ஆதலால் காகித யந்திரசாலை உற்பத்தியாக்கினால் தக்க லாபங்கிடைக்கும். இங்குள்ள அவ்வேலை நடைபெறும். இதற்கனுசாரமாக நம்மூர் வாலிபர் ஒருவர் யப்பானுக்குக் கைத்தொழில் கற்கப் போயிருக்கிறார். அவர் நற்சுகத்துடன்வந்து ஏதும் ஒரு நவமுயற்சியிற் கையிடுவார் என்று காத்திருக்கிறோம். அத்தருணத்தை நம்மூர்ப் பரோபகாரிகள் கைவிடாமல் அவர்க்குக் கூடிய உதவிபுரிந்து நம்நாடு சின்ன யப்பானென்று பெயர்பெறச் செய்வாராக. முற்காலத்தில் யாழ்ப்பாணமென்றல்ல யாப்பாணியர் குடியேறினதால் யாப்பானர்நாடு என்று பெயரிடப்பட்டுப் பிற்காலத்தில் யாழ்ப்பாணம் எனத் திரிந்ததெனப் பிற்காலத்தார் நினைக்கும்படி முன்னேற முயலுங்கள்.

### வாத சிலேட்டும சுரத்தின் குணமும் மருந்தும்.

சேர்ந்ததோரொன்று சிறந்தகழுஞ்சிரஸ், டேக்குநீரிலிட்டலெட்டிலொன்றானபின், போர்த்ததிற்பலிபோட்டுக்குடித்திடில், சாந்தமாஞ் சகலசுரமானதே. வேறு.

ஆனதேவதாருமுடனடர்ந்தவேற்கொம்பர்கொள்ளுப், பானல்போலும்விழியாய்ப்பற்படகம்கொத்தமலிவசம்பு, சினமிளகுதிற்பலிமுக் திரிகைப்பழமுத்தக்காசு, ஆனதோரொன்றிருகழஞ்சு தண்ணீரிரண்டுநாழிவிட்டே.

விட்டுக்காய்ச்சியுழக்கானால் மேவும்பொருங் காயங்கழஞ்சு, இட்டுக்குடிப்பீராமாகில் விடரேசெய்தக்குடல்தன்னில், ஒட்டித்திரியும்வாதசிலேட்டுமமாஞ்சுரங்களுள்ளதெல்லாம், முட்டுப்பட்டுத்தடுமாறி முறிக்கேயோடுங்கண்டாயே.

## பதார்த்த சாரம்.

### தாரா.

இதன் இறைச்சிக்குத் தாதுவிர்த்தியும் பித்தமும் வாத்தி அருவருப்பும் சொறிசிரங்குமுண்டாம். கடற்றாராக்கறிக்குத் தாதுவிர்த்தியுண்டாம்.

### [illegible] Tar

இது உலாந்தாமரத்தைக் குழித்தயிலமுறையாய் நீராவியாக்கி எடுக்கப்படுகிறது. நாட்பட்ட தடிமனுக்கும், மூத்திர ரோகங்களுக்கும், சொறி, சுவாசக்கிளைத்தாபிதம், அதிசாரசன்னிபாதசுரம், மலபந்தம் இவைகளுக்கும் ஒருதுளியில் அதிமதுரப்பாணிசேர்த்துக் கொடுக்கலாம். கபரோகம் இருமல் இவைகளுக்கு இதைத் தீயில்வைத்து ஆவியை முகக்கச்செய்யலாம். எச்சிற்றழும்பு, சிரங்கு, குட்டம், சொறி முதலிய சர்மரோகங்களுக்குத் தேன்மெழுகு 2 அவுன்சை உருக்கித் தாரில் 5 அவுன்சுஞ்சேர்த்து உருக்கிக் குளிரும்போது விரைவாய்த் துழாவிக்கொடுத்து மெதுவாயிருக்கும்படி தேங்காய்நெய்சேர்த்து இறக்கி இக்களிம்பைப்பூசினால் குணமாகும். தாரைவடித்து கிரியசற் (Crosote) என்னுந்தைலம் எடுக்கப்படுகிறது. இதை உள்ளுக்குக்கொடுத்தால் இரைப்பையின்வேதனை, கர்ப்பிணிவாந்தி ரத்தபித்தம், பிரமேகம், கருப்பப்பிரமேகம், மதுமூத்திரரோகம், தோணியாட்டநடுக்கம் இவைகளுக்குவந்தது. இருமல் க்ஷயரோகம் இவைகளுக்கு இதை மணக்கக்கொடுக்கலாம். மீனெண்ணெயுடன் கலந்து உள்ளுக்குங்கொடுக்கலாம். 7 சொட்டுத்தைலத்தில் மீனெண்ணெய் 18 நிறுஞ்சேர்த்துக்கொடுத்துப் பிறகு படிப்படியாய் அதிகப்படுத்தவேண்டியது. பிரதிதினம் ஒவ்வொருதுளிதைலம் உள்ளுக்குக்கொடுத்தால் சொட்டுமூத்திரம்நிற்கும். மதுமூத்திரரோகத்திற்கு 4 துளிமுதல் கொஞ்சங்கொஞ்சமாய் அதிகரிப்பித்து 10 துளிவரையும் கொடுத்தால் குணமுண்டு. நச்சுக்காற்றாலுண்டான காய்ச்சலுக்கு 22 துளிவரையில் அக்குளிற்றடவினால் வெயர்வையுண்டாகிச் சுரம் சாந்தியாகும்.

### தாழை.

இதன் சோற்றால் மாதர்க்குச் சூதகமுண்டாம். பூ பசியைத்தரும். விழுது இரத்தத்தையும் தாதையுமுண்டாக்கும். காய் வாதந்தீர்க்கும். பிறமேகவாதத்திற்குத் தாளங்காயெண்ணெயும், அழல்வாதத்திற்குத் தாழம்வீழ்தெண்ணெயும் உத்தமமானது.

## யாழ்ப்பாணம்.

ஊர்ச்சீர்—நன்மழை பெய்கிறது. பயிர்கள் நல்லாயிருக்கின்றன, ஆனல் முன்னெறித்த வெயிலின்ருக்கத்தால் சூடுண்டபயிர்கள் சிலவிடங்களிற் செத்தாளாயின, படுவன் கழிச்சல்போன்ற சிறப்பேதி சிலவிடங்களிலுலாவுகிறது.

குடிசனமதிப்பு—பத்துவருடத்துக்கு ஒருமுறை எடுக்கப்படும் குடிசனமதிப்பு வருகிற பங்குனிமீ 10உ இரவு எடுக்கப்படும். அத்தருணம் மதிப்புக்கணக்கரெல்லாரும் முன்னிலும்விழிப்பாயிருப்பார்களென்றும்புகிறோம்.

திட்டற்கு தற்பாடம்—யாழ்ப்பாண மணியகாரனை அடித்த திட்டருள் 1-ம் எதிரிக்கு 6 மாசமறியலூழியும் 50 ரூபா தெண்டமும் 2-ம் எதிரிக்கு 6 மாசமறியலூழியலும், 3-ம் எதிரிக்கு 3 மாசமறியலூழியமும் விதிக்கப்பட்டது. எதிரியை விடுவித்தார்களென்று சிலரில் விதானேவைத்தவழக்குச் சந்தேகத்தாற்போலும் விடப்பட்டது.

மல்லாகக்கோடு—இக்கோட்டை எடுத்துவிட முன் இரண்டு மூன்றுமுறை முயன்றும் விட்டுவிட்டார்கள். இப்போதும் அதைஎடுத்துவிடவும் ஊர்காவற்றுறையை யாழ்ப்பாணத்து நீதவானே பார்த்துவரவும் ஒழுங்குசெய்யத் தீர்மானித்தமையால் சென்ற 12உ விச்சுவே மண்டபத்தில் ஓர் பிரசித்தசபைகூடிற்று. அத்தருணத்தில் ராய்பகடூர் வாயி உவில்லியம்ஸ் சபாநாயகராளுர். இத்தீர்மானம் சரியற்றதெனச் சர்வசனசம்மதமாய்த் தீர்மானித்து அதைத் தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பஞ்செய்யும்படி மெஸ். ஜே. எம். ஹென்ஸ்மன் மெஸ், தி. பொன்னம்பலபிள்ளை மெஸ், தி. சி. சங்கரப்பிள்ளை என்பவர்கள் நியமிக்கப்பட்டார்கள். சபாநாயகருக்குத் துதிகூறலோடு கூட்டம் சமாப்தியாயிற்று.

பெரியஆமை—கரையூரார் தாமபிடித்த ஒருபெரியஆமையை அறுத்துப்பார்த்தபோது அதன்குடலுக்குள்ளே சில விலைபெற்ற முத்துகளும் அழுக்காமையோடுகளு மிருந்தனவாம்.

பணத்தையிழத்தல்—வட்டுக்கோட்டையில் ஒருவர் சட்டைச்சாக்கில் வெட்டுக்கொண்டுபோன 57ரூபாய்ப்பணத்தை இழந்துவிட்டாராம். இவ்வளவு தொகையைக் கவனவீனமாய்க் கொண்டுபோகலாமா?

யாழ்ப்பாணக்கப்பல்வழக்கு—டிஸ்திறிக்கோட்டாரால் தீர்க்கப்பட்ட இவ்வழக்கின் தீர்ப்பில் மெசெஸ். உவாக்கர்கொம்பனியார் திருத்திப்படாமல் சுப்பிறீங்கோட்டாருக்கு அப்பீல் செய்திருக்கிறார்கள்.

புதியஅப்புக்காத்துமார்—இரு யாழ்ப்பாணவரசியர் கடைசியாநடந்த அப்புக்காத்துமார் பரீட்சையில் சித்தியெய்தினர். ஒருவர் மெஸ், சி. வைத்தியலிங்கம். இவர் கௌரவ கனகசபையவர்களின் மருகர். மற்றவர் மெஸ், பொ. செல்லப்பா. இவர் மன்னார்க் கச்சேரிச் சிறாப்பராயிருந்து இளைப்பாறியிருக்கும் வண்ணார்பண்ணைவாசரான மெஸ், பொன்னம்பலம் அவர்களின் புத்திரன்.

டிஸ்திறிக்கோடு—யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு நீதிபதி மெஸ், தெயினவர்கள் கொழும்பு றெக்குவெஸ்துக்கோட்டு நீதபதியாக மாற்றப்பட அவரதுஇடத்தில் மெஸ். பின்றோ அவர்கள் நியமிக்கப்படுவாரெனக்கேள்வி.

அபின்—அபின்வாங்குதல் கஷ்டமாய்விட்டதால் நோய்க்காக அபின் தின்றுபழகினோர் அது கிடையாமல் உயிர்திறந்ததாகவும் கதைபரம்புகிறது. அபின்தின்பவர் சொல்வதைக்கேட்டால் மெத்தப் பரிதாபமாயிருக்கிறது. குடிவகையை இவ்வித கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவராமல் அபின்மாத்திரங்கட்டுப்பாடு செய்தது நியாயமல்ல. அபினும் கஞ்சாவும் சிலசமயங்களில் மாண்டுபோகும் உயிர்களை மீட்கிறதென்பது உண்மை ஆதலால் இப்பிரமாணத்தை அரசாட்சியார் மீண்டுங் கவனித்தல் அத்தியாவசியகம்.

## இலங்கை

இளைப்பாறல்—யாழ்ப்பாணத்திலே சிலகாலம் டிஸ்திறிக்கு நீதிபதியாயிருந்து பின் மட்டுக்களப்பு நீதிபதியாய்ப் போயிருந்த மெஸ், சாண்டர்ஸ் துரை உத்தியோகத்தாலே இளைப்பாறினர்.

மெஸ். உவேர்திங்டன் துரையுடையமரணம்—யாழ்ப்பாணத்திலே சிலகாலங்களாக டிஸ்திறிக்நீதிபதியாயிருந்து இளைப்பாறி இங்கிலாந்துசென்றிருந்த மெஸ், உவேர்திங்டன் துரை காலஞ்சென்ற துயரசங்கதிவரலாயிற்று.

சான்றுகொண்டிறத்தல்—முல்லைத்தீவில் ஒருவிதானே தனதுவேலையை வேறொரு ஆளுக்குக் கொடுத்துவிட்டதென்ற மனவிதனத்தால் காட்டுட்போய் சான்றுகொண்டிறந்துவிட்டாராம். இவ்வளவு பேதமையுள்ளவர்களுக்கேன் விதானேவேலை.

ஒருசிலுப்பு உடைதல்—காகபட்டணத்திலிருந்து 800 மூட்டைஅரிசியும் வேறு சரக்குகளும் எற்றித் திரிகோணமலைக்குவந்த கோனேசபுரவி எனுஞ்சிலுப்பு சென்ற 6உ புயற்காற்றிலகப்பட்டுச் சுண்டிக்குளத்திலே அதாவது முல்லைத்தீவுக்கு அப்பால் 27 மைல்தூரத்திலே கரையேறிப பாடாயுடைந்துபோயிற்று. லிலாசுகளிலே இருவர் இறந்தனர்.

இராசாவுக்கு ஞாபகசின்னம்—காலஞ்சென்ற எட்வேட் இராசாவுக்கு ஞாபகமாகக் கயரோககாரருக்கு ஒருவைத்தியசாலைகட்டி இராசாவுடையநாமத்தை அச்சாலைக்கிட்டு கடத்திவரவேண்டுமென்றும் கசநோய்பரவாதபடிக்கான வழிகள்செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. வைத்தியசாலை கட்டவும் தளவாடங்கள் மருந்துச்சாலைகள்வைக்கவும் செலவு 2 லட்சம்ரூபா வேண்டுமாம். வைத்தியசாலைக்கான வருஷசெலவுக்காக 59700 ரூபாவேண்டுமாம்.

மெஸ், எம். பிலிப்ஸ்—அநுராசபுரக்கச்சேரியின் தலைமைச்சக்கடுத்தாராகிய இவர் இம்மாச முதற்றிகதியுடனே முதலாம்வகுப்பு உத்தியோகத்துக்கு உயர்த்தப்பட்டாரென்பதையறிந்து சந்தோஷமானேம்.

மானநஷ்டவழக்கு—சிங்கலாயா எனும் சிங்களப்பத்திரிகையின் சொந்தக்காரனன மெஸ், W. யோண் பெரேரு என்பவர் தம்முடைய புத்திரியை ஒருகிறீஸ்தவனுக்கு விவாகம்முடித்துக்கொடுத்ததையிட்டு ஓர் புத்தமதப்பத்திரிகையின் அதிபர் மேற்படி மெஸ். பெரேரு என்பவரைக் கண்டித்துப்பேசினர். மெஸ்: பெரேரு அப்பத்திராதிபர்மேலேயும் பத்திரசொந்தக்காரர்மேலேயும் 5000 ரூபாவுக்கு ஒருமானநஷ்டவழக்குவைத்தார். இவ்வழக்குக் கொழும்பு டிஸ்திறிக்கோட்டிலே விளங்கப்பட்டு 2000 ரூபாயும் கோட்டுச்செலவும் இறுக்கும்படி தீர்ப்பாயிற்று.

சேர் கியூ கிளிவ்வோட்—இலங்கைக் கொலோனியல் சக்கிடுத்தாராகிய இவர் தம் பத்தினியாருடன் வருகிறவருடத் தைமீ 6உ மார்செலிஸ் துறைமுகமிருந்து புறப்பட்டு அடுத்த 21உ கொழும்புவந்து சேரவிருக்கின்றாராம்.

மின்சாரதீபம்—கொழும்புக்கும் கண்டிக்குமிடையேபோகிற புகைரதங்களுக்கு மின்சாரதீபம் அமைத்தாயிற்று. மற்றையபகுதிகளுக்கும் இனிமேல் வைக்கப்படும்போலும்.

பிரதிநிதித்தெரிவும்அரசாட்சிஉத்தியோகஸ்தரும்—அரசாட்சிஉத்தியோகஸ்தர் பிரதிநிதித்தெரிவில் தலையிடப்படாதென்ற பிரமாணத்துக்குமாறாக மெஸ், உபசேகரஎன்பவர் மெஸ். இராமநாதன் ஒருவரே கற்ற இலங்கைவாசிகளின் பிரதிநிதியாயிருக்கத் தகதவரென்று ஒருபத்திரிகைக்கு எழுதியதால் அவரை வேலையால் நீக்கிவிடப்படும்போலிருக்கிறதாம்.

பாளிமேந்துகுலைதல்—இங்கிலிஷ பாளிமேந்து இந்த 28உ குலைந்து பிரதிநிதிகளின் புதுத்தெரிவு நடைபெறும். பிரபுக்கள்சபையாருக்கும் ஊர்ப்பிரதிநிதிகள் சபையாருக்குமுள்ள பிணக்கே இப்பொழுது பாளிமேந்து குலைந்து புதியதெரிவு நடைபெறுவதற்கேதுவாயிற்று.

முத்துச்சிப்பிப்பார்—மதிச்சுக்கட்டியில் முத்துச்சிப்பிப்பார்களைப் பரிசோதிக்கும்பொருட்டு மெஸ், தோமஸ் சவுத்வெல் என்னுங் கலாநிபுணர் அங்குசென்றிருக்கின்றனர்.

பேதி—சென்ற 15உ தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குத் தபால்கொண்டுவந்த கப்பலில் ஒருவனுக்கு இந்நோய்கண்டு இறந்தனன்.

## நோய்திர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். நாப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங்களாவன:— முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமாயிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணுகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பருமூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும். (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானல் மூத்திரப்பை ரோகமடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள் வதற்கு ஒற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.





ஒரு புட்டி விலை, ரூபா. .... 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. .... 10 8 0

இவை, இவை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆன டப்பிளியு. ஏச். மைக்வர் அவரவர்களிடத்திலும், கிடைக்கும்.

Tam



1862 தொடங்கி 1910 வரைக்கும் நிலைபெற்றதே அதன்மேன்மைக்குச் சாட்சி.
நாற்பதுவருஷகாலமாய
ஸ்கொற் இமல்ஷன்
எந்தத் தேர்ந்தவைத்தியரின் பரிசோதனைக்கும் குறைவுள்ளதாய்க் காணப்படவில்லை.
அதின்பெறுபேறாக
இக்காலத்தில் உலகமெங்கும் சுவாசப்பைரோகம், இருமல், தடிமன், தேகபுஷ்டியின்மை, உணவில்விருப்பமின்மை ஆகியநோய்களுக்குப் பலராலுமங்கீகரிக்கப்பட்டமருந்தாயும் பிசாவகரும் பிள்ளைகளும் பெலன்தரும்மருந்தாயும் தசைகளைவளர்க்கும் மருந்தாயும் பாவிக்கப்படுகின்றது.



வாங்கும்போது இந்த சுலோகம் மீன்பிடிகாரனின் அடையாளமிட்ட, Emulsion இருக்கிறதைப் பார்த்து வாங்குங்கள்

கையால் தொடப்படாது

எல்லாமருந்து வியாபாரிகளிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

SCOTT & BOWNE LTD
MANUFACTURING
CHEMIST
ENGLAND LONON

